**அம்பாறை நகர சபை**
**அம்பாறை மாவட்டம்**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தம்பர் 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாறை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

2017 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் பெறுமதி ரூபா 10,900,265 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 11,050,538 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 150,273 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது 2018 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட்ட வீதவரி ரூபா 14,682 தொகை நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் பேணிச் செல்லப்படும் 01 வங்கிக் கணக்குகளுக்குரிய மீளாய்வாண்டிற்கான ரூபா 91,224 தொகையான வட்டி வருமானம் வருமானச் செலவினக் கணக்கில் வருமானமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் வருமான செலவினக் கணக்கில் ரூபா 5,212,957 தொகையான மிகையானது ஐந்தொகையின் திரண்ட நிதியத்திலான பற்றாக்குறைகள் கணக்கிற்கு ரூபா 5,071,530 ஆக கூட்டப்பட்டமையால், அந்தக் கணக்கின் பெறுமதியானது ரூபா 141,427 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டினுள் நிலையான சொத்துக்களினான அதிகரிப்பு ரூபா 11,966,674 ஆன போதிலும், மூலதன ஈட்டத்திற்கான வருமானத்திலான பங்களிப்பு மற்றும் மூலதனக் கணக்கிற்கு மானியங்களூடாக பங்களித்தில் ஆகிய கணக்குகளின் அதிகரிப்பானது

ரூபா 19,408,008 ஆக ரூபா 7,441,334 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டு ஐந்தொகை சமப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதிய சேர்வரி பேரேட்டுக்கமைவான பெறுமதியானது ரூபா 3,337,181 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அந்த பெறுமதி ரூபா 3,106,385 ஆக ரூபா 230,796 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,862,651 தொகையான கடன் பணத்தில் நிர்மாணிக்கப்பட்ட இடுகாடு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபைக்கு சொந்தமான 19 கட்டிடங்கள் தொடர்பில் சரியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த பெறுமதி கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிராமையால், சபையின் கட்டிடச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைக்கமைய மீளாய்வாண்டினுள் ஏலமிடப்பட்ட ரூபா 6,350 பெறுமதியான 97 உருப்படிகளின் கிரயத்தினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மதுபானசாலையின் இறுதி இருப்பின் கிரயப் பெறுமதி ரூபா 2,043,021 ஆன போதிலும், ஐந்தொகையில் இறுதி இருப்பின் விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் ரூபா 2,474,218 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால், இறுதி இருப்பின் பெறுமதி மற்றும் மொத்த இலாபம் ரூபா 431,197 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வங்கிக் கணக்கில் காணப்படுகின்ற சபைக்கு சொந்தமான நகர சபையின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதியான ரூபா 61,977 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 177(2) ஆம் பிரிவு | - | வருடாந்தக் கணக்கின் பொழிப்பினை ஒவ்வொரு வருடமும் மார்ச் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வர்த்தமானியின் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 20,305 | கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 20,305 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 4,457,022 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெறுமதியான ரூபா 4,457,022 தொகையான 02 வருடங்களை கடந்த 104 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | - | கணனி மற்றும் கணனி மென்பொருள் தொடர்பில் தனியானதொரு நிலையான சொத்துக்கள் பதிவேறொன்று பேணச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | சபையின் பொறுப்பில் உள்ள எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய 23 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. |
| (உ) | நிதி அமைச்சின் 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 142 | 123,420 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் இடர் கடன் பெறுமதி ஆகக்கூடியது ரூபா 250,000 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 03 உத்தியோகத்தர்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,744,657 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,027,064 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i). | வீதவரியும் வரியும் | 10,720,000 | 11,188,507 | 9,955,907 | 25,781,795 | 10,120,000 | 11,816,199 | 9,840,913 | 24,549,195 |
| (ii). | வாடகை | 7,723,650 | 6,212,365 | 7,156,619 | 2,571 | 5,700,000 | 7,218,900 | 6,308,575 | 946,825 |
| (iii). | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 866,000 | 1,939,152 | 1,939,152 | - | 1,950,000 | 1,739,848 | 1,939,152 | - |
| (iv). | ஏனைய வருமானம் | 28,903,475 | 26,931,731 | 26,003,175 | 1,984,431 | 15,720,000 | 38,636,693 | 26,625,856 | 1,055,875 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 72,823,650 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் ரூபா 45,054,853 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய வருமான சேகரிப்பின் சதவீதமானது 62 % மட்டத்தில் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

2012 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 25,781,795 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள்

மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

---------------------

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 157 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

----------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலும் சேகரிக்கப்பட்ட ரூபா 3,106,385 தொகையான பெறுமதி சேர் வரிப் பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 இன் 20 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா 12 மில்லியனுக்கு மேற்படுமாயின் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான சபையின் வரி அறவிட வேண்டிய வருமானம் ரூபா 14,487,175 ஆகக் காணப்பட்ட போதிலும், பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்திருக்கவில்லை.

(இ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் ரூபா 23,400 முத்திரை வரித்தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் வங்கிக் கணக்கில் 2016 யூன் 30 ஆந் திகதியிலிருந்து 2017 திசெம்பர் 26 ஆந் திகதி வரையான காலத்தினுள் தீர்வையாகாத வைப்புக்கள் ரூபா 4,342 மற்றும் இனங்காணப்படாத வைப்புக்களான ரூபா 90,720 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் கணக்காளர் பதவி 2010 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியின் 16 பதவிகளுக்காக 23 உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையும் 01 பதவிக்கான மிகையும் நிலவியது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச செயலாளருக்கு உரித்துடைய சபையினால் பயன்படுத்தப்படும் 47 காணிகளின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்படுத்தப்படும் 10 வாகனங்களின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

அம்பாறை மக்கள் பூங்காவில் பிரதான கட்டிடம் மற்றும் அதன் ஏனைய நிர்மாணங்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு

(அ) பூங்காவின் முகப்பானது ரூபா 4,432,775 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு 2014 யூலை 02 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி வரையிலும் அந்தக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) பூங்காவின் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ள இடத்தின் நிலத்தில் சம்பளமிடுவதற்காக 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி ரூபா 352,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இறப்பர் கம்பளம் விரிக்கப்படாது மக்கள் பூங்காவின் முகப்பில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதானக் கட்டிடத்திற்கு தேசத்திற்கு மகுடம் செயற்திட்டத்தின் கீழ் 2015 சனவரி 02 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 435,200 பெறுமதியான 64 கதிரைகள் சபையின் வளாகத்தில் மேல் மாடியில் 02 வருடங்களுக்கு அண்மிய காலமாக முறையற்ற விதத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு வருமானமீட்டும் நோக்கில் இந்த பூங்கா மற்றும் கட்டிடங்கள் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 21 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,720,848 தொகையும் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 14 கணக்காய்வு திகதி வரையிலும் அதில் எந்தவொரு வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 வாகனப் பயன்பாடு**

சபைக்கு சொந்தமாக தற்போது பயன்படுத்தப்படும் 19 வாகனங்களுக்காக 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வருமான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் காப்பீட்டினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,878,428 தொகை செலவிடப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது திஸ்ஸபுர ஐக்கிய வயோதிபர்கள் நலன்புரி சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட முகப்பு மற்றும் மலசலகூடம் மற்றும் குளியலறை ஆகியன ஒரு வருடம் கடப்பதற்கு முன்னர் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளானமையால் அவை உடைத்து அகற்றப்பட்டிருந்தன. இதற்குரிய பிடிகாசும் இதுவரையில் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தம்பர் 10 ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 10 சதவீதம் முதல் 165 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கடடுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | | கவனம் செலுத்த வேண்டிய துறைகள் |
|---|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | - | i. நிலுவை வருமானத்தை அறவிடாமை. |
| | | ii. உப விதிகளை விதிக்காமை. |
| | | iii. வருமான மூலங்களை இனங்காணாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | - | பாதீட்டைச் சரியானதாகத் தயாரிக்காமை மற்றும் விலகல்களை குறைக்காமை. |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | | விரைவாக சரி பிழைகளை கண்டறியக் கூடிய முறையில் பொருட்களை களஞ்சியப்படுத்தாமை. |
| (ஈ) சொத்துப் பயன்பாடு | | நிலையான சொத்துக்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாமை மற்றும் விளைவற்றுக் காணப்படல். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்கீடு | - | சொத்துக்கள் கணக்கு வைக்கப்படாமை. |
| (ஊ) | ஒப்பந்த நிர்வாகம் | - | (i) போதியளவான மேற்பார்வையின்மை. |
| | | | (ii). நிர்மாண கோவைகளை சரியாக பேணாமை. |
| | | | (iii). சுற்றறிக்கைக்கமைய பணிகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் நிலவுகின்றமை. |